பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
22 06 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம்-மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 3 லட்சத்து 105 பேர் பங்கேற்று சாதனை படைத்திருப்பது பாராட்டுதலுக்குரியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நக்ஸலைட்டு பிரச்சினைக்கு முடிவுகட்ட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. தொழில்துறையின் வளர்ச்சியில் திமுக அரசு கவனம் செலுத்தவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. மதுரையில் தற்போது நடைபெற்று வரும் முருக பக்தர்கள் மாநாட்டில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றுள்ளனர்.

5. ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 10 வெள்ளி, 13 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 3 லட்சத்து 105 பேர் பங்கேற்று சாதனை படைத்திருப்பது பாராட்டுதலுக்குரியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், யோகாவை வாழ்வில் ஒரு அங்கமாக இணைப்பதற்கான இயக்கத்திற்கு இது மேலும் வலுசேர்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக ஆந்திர மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நக்ஸலைட்டு பிரச்சினைக்கு முடிவுகட்ட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாகரிக சமூகத்தில் வன்முறைக்கும், பயங்கரவாதத்திற்கும் இடமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்கான சிறப்பு முகாம்கள் அடுத்த மாதம் 15ஆம் தேதி மாநிலம் முழுவதும் 10 ஆயிரம் இடங்களில் நடத்தப்படவுள்ளதாக சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் கூறியுள்ளார்.

இன்று தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் இடங்கள் குறித்த விவரங்களை மாவட்ட ஆட்சியர்கள் வெளியிடுவார்கள் என்றும் தெரிவித்தார்.

இந்த முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது, அக்டோபர் மாதத்திற்குள் முடிவெடுக்கப்படும் என்றும் திருமதி. கீதா ஜீவன் கூறினார்.

>>>>>><<<<<<

தொழில்துறையின் வளர்ச்சியில் திமுக அரசு கவனம் செலுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநில அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் அண்மையில் மதுரையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், ஆந்திரா, கர்நாடகா, தெலங்கானாவுடன் ஒப்பிடுகையில் தமிழகம் தொழில்துறையில் பின்தங்கியுள்ளது என்று கூறியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகம் கடந்த நான்காண்டுகளில் அனைத்து துறைகளிலும் பின்தங்கியதே திமுக அரசின் சாதனை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு தற்போது நடைபெற்று வருகிறது.

ஆந்திர துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாண், பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றுள்ளதாகவும், மதுரை மாநகரமே விழாக்கோலம் பூண்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<<**

இனி..

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்.

(Opening music – 10 செகண்ட்ஸ்)

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களைக் கண்டுள்ளது.

இது தொடர்பான செய்தித் தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது எரிசக்தித்துறை மேம்பாட்டிற்கான திட்டங்கள்.

(வாய்ஸ் பைட் - 116 செகண்ட்ஸ்)

*மின் தேவை அதிகரிப்பு, கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் மேம்படுத்தப்பட்டது, மரபுசார்ந்த மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைகளுக்கு அரசு அளித்துவரும் கொள்கை ரீதியான ஆதரவு காரணமாக, நாட்டில் மின்துறை கடந்த 11 ஆண்டுகளில் அபார வளர்ச்சி அடைந்துள்ளது.*

*இம்மாத நிலவரப்படி, நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித்திறன் 476 ஜிகாவாட்டை எட்டியுள்ளது.*

*இதில் பாதியளவுக்கு புதைபடிமம் அல்லாத எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.*

*புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மட்டும் 226 ஜிகாவாட்டை எட்டியிருப்பதன்மூலம், சூரியசக்தி மின் உற்பத்தியில் இந்தியா தற்போது உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும், காற்றாலை மின் உற்பத்தியில் நான்காவது பெரிய நாடாகவும் உருவெடுத்துள்ளது.*

*2018-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் 100 சதவீத மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், அதன் பிறகு 2 கோடியே 80 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மின்பற்றாக்குறையும் பெருமளவு குறைந்துள்ளது.*

*2014-ஆம் ஆண்டில் நான்கு சதவீதமாக இருந்த மின் பற்றாக்குறை தற்போது பூஜ்யம் புள்ளி ஒரு சதவீதமாக குறைந்திருப்பதுடன், தனிநபர் மின் நுகர்வு 45 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*பிரதமரின் சூரியசக்தி மின் திட்டத்தின்மூலம், நாடு முழுவதும் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் நிலையில், பிரதமரின் **Kusum** திட்டத்தின்கீழ், விவசாய பம்ப் செட்டுகளுக்கு சூரியசக்தி மின் இணைப்பு வழங்கப்படுகிறது.*

*காற்றாலை மின் உற்பத்தியும் இரண்டு மடங்குக்கு மேல் அதிகரித்திருப்பதோடு, நீர்மின் உற்பத்தி, உயிரி எரிவாயு மற்றும் அணுசக்தி சார்ந்த மின் உற்பத்தியும் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகிறது.*

*அதேவேளையில், நாட்டின் நிலக்கரித்துறை சுயசார்பு மற்றும் நீடித்த தன்மையை நோக்கி நவீனப்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக, நிலக்கரி உற்பத்தி இதுவரை இல்லாத வகையில் அதிகரித்திருப்பதுடன், இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலை கணிசமாக குறைந்துள்ளது.*

*தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் முதல், சர்வதேச சூரியசக்தி கூட்டணி வரை, இந்தியா மின்துறையில் தனது சுய தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டுமின்றி, தூய்மையான, பசுமையான எதிர்காலத்தை நோக்கி முன்னேறி செல்கிறது என்றால் அது மிகையல்ல)*

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ்வரை அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 47 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 50 சதவீத மானிய விலையில் நாட்டுக்கோழி குஞ்சுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி, விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திரு. பிரசாந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம், காவல்துறை கண்காணிப்பாளர் திரு. யாதக் கிரிஷ் அஷோக் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், பேரிஜம் ஏரிப்பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகம் காணப்படுவதால், சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்வதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு 18 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 10 வெள்ளி, 13 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Nitesh Kumar**-ம், மகளிர் ஒற்றையர் பிரிவில் மனிஷா ராம்தாசும் தங்கப்பதக்கம் வென்றனர்.

இதேபோல், ஆடவர் இரட்டையர் பிரிவில் **Sukant Kadam – Nitesh Kumar** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் நிதேஷ்குமார் - துளசிமதி முருகேசன் இணையும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் சூர்யகாந்த்தும், மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் **Mandeep, Nityashree, Palak Kholi** ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவுகளில் ஜெகதீசன் - நவீன் இணையும், **Hardik - Ruthick** இணையும், மகளிர் இரட்டையர் பிரிவுகளில் மானசி – துளசிமதி இணையும், நித்யா – **Rachana** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவுகளில் நித்யா – கிருஷ்ணா இணையும், **Ruthick - Mansi** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றது.

**>>>>>><<<<<<**

**Scychelles-**ல் நடைபெற்று வரும் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் ஆதித்ய பிரதாப், நீரஜ், ஹிமான்சு, ஆசிஷ், அன்மோல், கார்த்திக் தலால், கவ்ரவ் ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>>><<<<<<**

நான்கு நாடுகளுக்கு இடையேயான ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

பெர்லினில் நடைபெற்ற இப்போட்டியில் **Shardanand Tiwari, Sourab Anand Khushwaha, Amir Ali** தலா ஒரு கோல் போட்டனர்.

**>>>>>><<<<<<**

துனிஷியாவில் நடைபெற்ற உலக பாரா கிராண்ட் ப்ரீ தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

**>>>>>><<<<<<**

லீட்ஸில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று, இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 5 விக்கெட் இழப்புக்கு 349. ரன் எடுத்துள்ளது.

**>>>>>><<<<<<**

வியட்நாமில் நடைபெற்ற 23 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த போட்டியின் ஆடவர் பிரிவில் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்றது.

**>>>>>>END<<<<<<**